IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS. 100/2018

Deposition of Witness : DW 3

Name : குமார் (வயது – 69)

Father's Name /W/o : த/பெ நவகோடி

Religion : இந்து

Calling : –

Address : சிறுணமல்லி.

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 10.03.2026.

## குறுக்கு விசாரணை

1. நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் ஆவண எழுத்தாளராக உள்ளேன். ஆவண எழுத்தாளருக்கான உரிமம் உள்ளதா என்றால் உள்ளது. நான் எந்த பதிவு அலுவலங்களில் ஆவண எழுத்தாளராக உள்ளேன் என்றால் அரக்கோணம் பதிவு மாவட்டம் முழுவதும். வாதி, பிரதிவாதி எந்த தேதியில் கிரையம் பேசிக்கொண்டார்கள் விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 2010 ஆம் ஆண்டு. அவர்கள் குடும்பத்துடன் பேசிக்கொண்டார்கள். அவர்கள் குடும்பத்திற்குள் என்ன விபரம் பேசிக்கொண்டார்கள் என்று எனக்கு தெரியாது என்றால சரிதான். வழக்கு சொத்து சம்பந்தமாக பதிவு செய்த கிரைய ஆவணம் எழுதிய விபரம் மட்டும தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

2. ஆவணத்தில் எழுதிய விபரங்கள் மட்டும்தான் எனக்கு தெரியும் என்றாலும் குடும்பத்தில் என்ன பேசிக்கொண்டார்கள் மற்றும் சொத்து சம்பந்தமாக என்ன பிரச்சினை என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எந்த தேதியில் பி.சா.ஆ – 6 எழுதினேன் என்றால் 2010 ஆம் வருடம் தேதி ஞாபகமில்லை. சகோதரிகளுக்குள் எவ்வளவு தொகை கொடுத்து

வாங்கினார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

3. நான் பி.சா.ஆ – 6 ஆவணம் எழுதினேன் மற்றபடி ஆவணத்தின் அடிப்படையில் அவர்கள் சொத்தை ஒப்படைத்தார்களா என்று நான் நேரடியாக பார்த்தேனா என்றால் சரிதான். பிரதிவாதி வீடு கட்டியுள்ளார். வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஆவணத்தை நான் எழுதியதால் என்னை சாட்சியம் சொல்ல அழைத்தார்கள் என்றாலும் அதனால் நான் சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான்.

**(மறு விசாரணை இல்லை)**